தினத்தந்தி சென்னை 14-2-2020



# பெண்கள் கல்லூரி போட்டிகள்: எஸ்.ஆர்.எம். அணி 'சாம்பியன்'

சென்னை, பிப்.14–

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரி சார்பில் பெண்கள் கல்லூரிகளுக்கான 13–வது விளையாட்டு போட்டிகள் 2 நாட்கள் நடந்தது. இதில் செஸ் போட்டியில் செயின்ட் ஜோசப்ஸ் என்ஜினீயரிங் கல்லூரி முதலிடத்தையும், எத்திராஜ் கல்லூரி 2–வது இடத்தையும் பிடித்தன. கூடைப்பந்து போட்டியில் இந்துஸ்தான் கல்லூரி முதலிடத்தையும், எஸ்.ஆர்.எம். அணி 2–வது இடத்தையும் பெற்றன. டேபிள் டென்னிஸ் போட்டியில் எஸ்.ஆர்.எம். அணி முதலிடத்தையும், எஸ்.எஸ்.என். அணி 2–வது இடத்தையும் கைப்பற்றின. பேட்மிண்டன் போட்டியில் செயின்ட் ஜோசப்ஸ் அணி முதலிடத்தையும், எஸ்.எஸ்.என். அணி 2–வது இடத்தையும் தனதாக்கின. பால் பேட்மிண்டன் போட்டியில் எஸ்.ஆர்.எம். அணி முதலிடத்தையும், எத்திராஜ் அணி 2–வது இடத்தையும் தனதாக்கின. கைப்பந்து போட்டியில் இந்துஸ்தான் அணி முதலிடத்தையும், எஸ்.ஆர்.எம். அணி 2–வது இடத்தையும் பெற்றன. இந்த போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை எஸ்.ஆர்.எம். அணி கைப்பற்றியது. செயின்ட் ஜோசப்ஸ் 2–வது இடம் பெற்றது. பரிசளிப்பு விழாவில் தமிழ்நாடு கூடைப்பந்து சங்க தலைவர் வி.வி.ஆர்.ராஜ்சத்யன், முன்னாள் சர்வதேச நீச்சல் வீரர் அக்னீஸ்வர் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்கள்.

170220